மோப்பிரிபாளையம் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : அ.ஆனந்தகுமார்

ந.க.எண்.167/2019 நாள்.18.06.2021
மனைப்பிரிவு அனுமதி எண். 01 /2021-2022

பொருள் : மனைப்பிரிவு – கோயம்புத்தூர் மாவட்டம் –மோப்பிரிபாளையம் முதல் நிலை பேரூராட்சி – மோப்பிரிபாளையம் கிராமம் க.ச.எண்கள்.281/2ஹச், 281/2ஜெ, 282/3சி, 283/1, மற்றும் 283/2 –ல் 8.12 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவுகள் அனுமதி வேண்டியது – தொழில் நுட்ப அனுமதி – இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.கே.ராதாகிருஷ்ணள் மற்றும் 3 நபர்கள் 14/8, பாரதி வீதி, வெள்ளைகிணறு, கோயம்புத்தூர் என்பவர் விண்ணப்பம் நாள்.20.09.2019
2. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019.
3. இவ்வலுவலக ந.க.எண்.167/2019 நாள்.26.09.2019
4. அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3345/2021 நாள்.15.03.2021
5. நகர் ஊரமைப்பு துறை, நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோவை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.6817/2019/கோம, நாள்.05.05.2021.
6. மோப்பிரிபாளையம் பேரூராட்சி மன்றத்தீர்மானம் எண். 20/2021 நாள்.31.05.2021
7. தொடர்புடைய ஆவணங்கள்.

*****

கோயம்புத்தூர் மாவட்டம், மோப்பிரிபாளையம் முதல் நிலை பேரூராட்சிக்கு . திரு.கே.ராதாகிருஷ்ணள் மற்றும் 3 நபர்கள், 14/8, பாரதி வீதி, வெள்ளைகிணறு, கோயம்புத்தூர் என்ற முகவரியிட்டு விண்ணப்பதாரர் 20.09.2019ம் தேதியில் பார்வை 1ல் கண்டுள்ளவாறு மோப்பிரிபாளையம் பேரூராட்சி மோப்பிரிபாளையம் கிராமம் க.ச.எண்கள்.281/2ஹச், 281/2ஜெ, 282/3சி, 283/1, மற்றும் 283/2 –ல் 8.12 ஏக்கர் பரப்பளவு இடத்தை மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்ய உள்ளதாகவும் இந்த மனைப்பிரிவிற்கு விற்பனை செய்வதற்கு உரிய அங்கீகாரம் வேண்டி இவ்வலுவலகத்தில் உரிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதில் மனுதாரரின் விண்ணப்பத்தை பரிசீலனை செய்து இடத்தை பார்வையிட்டு பார்வை 3ல் கண்ட இவ்வலுவலக கடிதத்தின்படி கோயம்புத்தூர் மண்டல துணை இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

பார்வை 4 மற்றும் 5 வரை உள்ள நடவடிக்கைகளை தொடர்ந்து பார்வை 5ல் கண்ட நகர் ஊரமைப்புத் துறை அவர்களின் கடிதத்தில் க.ச.எண்கள்.281/2ஹச், 281/2ஜெ, 282/3சி, 283/1, மற்றும் 283/2 –ல் 8.12 ஏக்கர் பரப்பளவு இடத்தில் 158 எண்ணிக்கை மனைகளும் தொழில் நுட்ப அனுமதி **ம.வ./ந.ஊ.இ.எண்.81/2021** நாள்.19.04.2021 மற்றும் **ம.வ./கோமா.எண்.96/2021** நாள்.05.05.2021–ன்படி நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைக்குட்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து பார்வை 6ல் கண்ட பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அவர்களால் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட தொழில் நுட்ப அனுமதியின் அடிப்படையிலும் மேற்கண்ட மனைப்பிரிவிற்கு அரசு தலைப்பில் செலுத்த வேண்டிய 3 சதவிகித கட்டணம் கருவூலகத்தின் செலுத்து சீட்டு எண்.20210615144029 நாள்.15.06.2021ன் படி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம், மனைகள் கட்டணம் மற்றும் காலியிட வரி(2021–22) பேரூராட்சி செலுத்து சீட்டு எண்.98/2021–22 நாள்.18.06.2021ன் படி செலுத்தப்பட்டுள்ளதனைக் கொண்டும் இந்த மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கப்படுகிறது. 01.04.2022ம் நாளிலிருந்து காலியிடக் கட்டணம் வசூலிக்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

18/4/2024

செயல் அலுவலர்
மோப்பிரிபாளையம் முதல் நிலை பேரூராட்சி
கோவை மாவட்டம்.

இணைப்பு மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்

பெறுநர் .
திரு.கே.ராதாகிருஷ்ணள் மற்றும் 3 நபர்கள்,
14/8, பாரதி வீதி, வெள்ளைகிணறு,
கோயம்புத்தூர்

நகல்

1. கோவை மண்டல நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. சார் பதிவாளர், அன்னூர் அவர்களின் பத்திரப் பதிவு தகவலுக்காக.